

காஞ்சி வடக்கு மாவட்டம் ஆலந்தூர் தெற்கு பகுதி திமுக சார்பில் செயற்குழு கூட்டம் நங்கநல்லூர் கே.சி.டி.மஹாலில் பகுதி அவை தலைவர் எஸ். சுந்தர்ராஜன் தலைமையிலும் பகுதி கழகச் செயலாளர் மண்டல குழு தலைவருமான என். சந்திரன் முன்னிலையிலும் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் சிறு குறு நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் காஞ்சி வடக்கு மாவட்ட செயலாளர் தா.மோ. அன்பரசன் அவர்களும் தொமுச மாநில துணை செயலாளர் பொன்ராம் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்கள். இந்நிகழ்ச்சியில் தலைமைப் பொதுக்குழு உறுப்பினர் எம்.எஸ். கே.இப்ராஹிம், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் கோல்டு பிரகாஷ், மாவட்ட வர்த்தக அணி அமைப்பாளர் ஜெயராம் மார்த்தாண்டன், பகுதி நிர்வாகிகள் ஏ.சாலமோன், எம்.சி இ.ரமேஷ், ராஜேஸ்வரி சத்யா வட்டகழக நிர்வாகிகள் ஜெ. நடராஜன், இ. உலகநாதன், டி. ஜேசுதாஸ், ஏ.வேலவன், ஏ.ஆர். சரவணா, மற்றும் மாவட்ட பிரதிநிதிகள், அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள், வட்ட நிர்வாகிகள், கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

### எம்.ரூபன் தலைமை - நொளம்பூர் வே. ராஜன் முன்னிலை!தினகரன் சண்முகம் ஏற்பாட்டில்!

# மதுரவாயலில் - ஆலப்பாக்கம் கு.சண்முகம் முதலாமாண்டு நினைவு நாள் நிகழ்ச்சி!

### 2000 பேருக்கு காரம்பாக்கம் க. கணபதி எம்.எல்.ஏ.,உணவு வழங்குகிறார்!

சென்னை,ஆக,7,

சென்னை தெற்கு மாவட்டம், மதுரவாயில் வடக்கு பகுதி, 146 வது வட்டத்தில், முத்தமிழ் அறிஞர், தமிழினத் தலைவர், கலைஞர் அவர்களின் 6வது ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு அவரது திருவுருவப் படத்திற்கு மலரஞ்சலி செலுத்தப்படுகிறது. மேலும் 146 வது வார்டு மாமன்ற முன்னாள் உறுப்பினரும் தலைமை செயற்குழு முன்னாள் உறுப்பினருமான ஆலப்பாக்கம் கு. சண்முகம் அவர்களின் முதலாம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு 146 வது வட்டத்தில் இன்று( 07.08.2024 புதன்கிழமை) மதியம் 12.00 மணிக்கு பாரதிதாசன் நகர், பிரதான சாலையில் 2000 பேருக்கு அறுசுவையுடன் கூடிய உணவு வழங்கும் நிகழ்ச்சி நடைபெற உள்ளது. வட்டக் கழக செயலாளர் மதுரவாயல் எம் ரூபன் தலைமையில் மதுரவாயல் வடக்கு பகுதி கழக செயலாளர் வளசரவாக்கம் மண்டல குழு தலைவருமான வே. ராஜன் முன்னிலையில் தகவல் தொழில் நுட்ப அணி மாவட்ட துணை ஒருங்கிணைப்பாளர் தினகரன் சண்முகம் ஏற்பாட்டில் நடைபெறுகின்றது.

இந்நிகழ்ச்சியில் மதுரவாயல் சட்டமன்ற உறுப்பினர், மதுரவாயில் தெற்கு பகுதி கழக செயலாளர் காரம்பாக்கம் க.கணபதி.எம்.எல்.ஏ. பொதுமக்களுக்கு உணவு வழங்குகிறார். இதில் கழக முன்னணித் தோழர்கள் கலந்து கொள்கின்றனர்.

### இணையவழி மூலம் ஒப்புதல்!

# எளிமையான முறையில் வீடு கட்டுவதற்கான அனுமதி!

## சென்னை மாநகராட்சி ஆணையர் தகவல்!

சென்னை,ஆக.7-

பெருநகர சென்னை மாநகராட்சியில் கட்டடம் கட்டுவதற்கு திட்ட அனுமதி மற்றும் கட்டட அனுமதி பெறப்பட வேண்டும். பெருநகர சென்னை மாநகராட்சியில் வழங்கப்படும் பெரும்பாலான அனுமதிகள் தனிவீடு கட்டும் நடுத்தர மக்களுக்காக வழங்கப்படுபவை.

ஆதலால் நடுத்தர மக்கள் பயன்படும் வகையில் எளிதாக வழங்கும் நோக்கில் சுயசான்றிதழ் அடிப்படையில் இணையவழி (Single Window Portal) மூலம் சமர்ப்பித்த உடனே வெளிப்படை தன்மையுடன் கூர்ந்தாய்வு கட்டணம் மற்றும் உள்கட்டமைப்பு மற்றும் மேம்பாட்டு கட்டணம் இன்றி 2500 சதுர அடி வரை பரப்பளவுள்ள மனையில், 3500 சதுர அடி வரையிலான தரைத்தளம் (அ) தரைத்தளத்துடன் கூடிய முதல் தளம் குடியிருப்புக் கட்டிடங்கள் ஒப்புதல் வழங்கும் நடைமுறையினை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 22.07. 2024 அன்று தொடங்கி வைத்தார்கள்.

இவ்வாறு ஒப்புதல் வழங்குவதற்கு நெறிமுறைகளை வகுத்து வசூலிக்கப்பட வேண்டிய கட்டணங்களையும் குறிப்பிட்டு அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. இம்முறையில் அனுமதி வழங்கும் பொழுது கட்டிட அனுமதி கட்டணமாக ரூபாய் 100/ ஒரு சதுர அடிக்கு வசூலிக்கப்பட வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது

இந்த திட்டமானது பொதுமக்களின் நலன் கருதி தங்களின் கனவான தனி வீடு கட்டும் நோக்கத்திற்கு வழிவகை செய்யும் நோக்கில் அமைத்துள்ளது. வணிக நோக்கத்தோடு கட்டுபவர்களுக்காக கொண்டு வரப்பட்டவில்லை.

சுயசான்றின் அடிப்படையின் வழங்கப்படும் அனுமதிக்கான கட்டண விவரம் கீழ்கண்டவாறு உள்ளது.

**விவரம், கட்டணம் சதுர மீட்டருக்கு (ரூபாய்) வருமாறு:**

வளர்ச்சி கட்டணம் - 15/, கட்டிட அனுமதி கட்டணம் - 600/, தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர் நலநிதி கட்டணம் - 267/, சாலை வெட்டு சீர் செய்யும் கட்டணம் - 194/

ஏற்கனவே, பெருநகர சென்னை மாநகராட்சியில் அனுமதி வழங்கும் பொழுது வசூலிக்கப்படும் கட்டணங்களின் விவரம்.

**விவரம், வசூலிக்கப்படும கட்டணம் சதுர அடி வருமாறு:**

வளர்ச்சி கட்டணம் - 1.40/, கட்டிட அனுமதி கட்டணம் - 7.60/, தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர் நலநிதி கட்டணம் - 24.80/, சாலை வெட்டு சீர் செய்யும் கட்டணம் (தோராயமாக 13.5 ச.மீ சாலை வெட்டு பரப்பளவு) - ரூ.4525 ஒரு ச.மீ கட்டணம் - 22.60/,

மழைநீர் சேகரிக்கும் அமைப்பு, 20 ச.மீ ஒரு ச.மீ கட்டணம் 230, கீழ்நிலை நீர்தேக்க தொட்டி 20 ச.மீ ஒரு ச.மீ கட்டணம் 230, மேல்நிலை நீர்தேக்க தொட்டி 20 ச.மீ ஒரு ச.மீ கட்டணம் 230, கழிவுநீர் சேகரிக்கும் தொட்டி, 20 ச.மீ ஒரு ச.மீ கட்டணம் 230 -8.80/,

சுற்று சுவர் கட்டுவதற்கு 20 ச.மீ ஒரு ச.மீ கட்டணம் 230 - 99.70/, உள்கட்டமைப்பு மற்றும் மேம்பாட்டு கட்டணம் - 34.80/.

சுயசான்றின் அடிப்படையில் வழங்கப்படும் அனுமதிக்கான கட்டணங்கள் ஏற்கனவே உள்ள கட்டணங்களுக்கும் எந்த விதமான வித்தியாசம் இல்லாமல் இருக்கின்றது.

மேலும், ஒரு சில மாநகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளில் கட்டடங்களுக்கான சுயசான்றின் அடிப்படையில் வழங்கப்படும் அனுமதி கட்டணம் சற்று அதிகமாக இருந்ததை அரசு கவனத்தில் கொண்டு, அந்தக் கட்டணத்தையும் வெகுவாகக் குறைத்துள்ளது.

நடுத்தர வர்க்க பொது மக்களுக்கு பயன்பெறும் வகையில் உள்ள இந்த திட்டத்தின் பலன்களை பெறுவதனை தடுக்கும் நோக்கில் தவறான கருத்தினை பொது மக்கள் மத்தியில் பதிவு செய்வதற்காக சிலர் முயற்சி செய்கிறார்கள்.

எனவே, பொதுமக்களுக்கு மிகவும் பயனுள்ள இந்த திட்டத்தினை நடுத்தர தரப்பு மக்கள் பயன்படுத்தி தங்களின் கனவான வீடு கட்டுவதற்கு எளிமையான முறையில் அனுமதியினை பெற்று பயன் பெறலாம் என்று தெரிவித்துக் கொள்ளப்படுகின்றது.

மேற்கண்ட தகவலை பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் ஜெ.குமரகுருபரன், தெரிவித்துள்ளார்.

### சென்னை தெற்கு மாவட்ட இளைஞர் அணி கா.வீ.தியாகராஜன் தாயார்

# திருமதி சரஸ்வதி (எ) எஸ்தர் நினைவேந்தல் - திருவுருவப் படம்!

### அமைச்சர் மா.சுப்பிரமணியன் திறந்து வைக்கிறார்! எஸ்.அரவிந்த் ரமேஷ் எம்.எல்.ஏ. பங்கேற்பு!

சென்னை, ஆக. 7 -

சென்னை தெற்கு மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் கா.வீ.தியாகராஜன் தாயார் திருமதி.சரஸ்வதி (எ) எஸ்தர் அவர்கள் 26.7.2024 அன்று மறைவெய்தினார்.

அன்னாரது நினைவேந்தல் மற்றும் திருஉருவப் படத்திறப்பு நிகழ்ச்சி நாளை (8.8.2024 - வியாழக்கிழமை) மாலை 7:00 மணி அளவில் சென்னை தெற்கு மாவட்டம், சோழிங்கநல்லூர் கிழக்கு பகுதி 194 (அ) வட்டம் ஈஞ்சம்பாக்கத்தில் அமைந்துள்ள (கா.வீ.தியாக ராஜன்) இல்லத்தில் நடைபெறுகிறது.

இந்த நிகழ்வில் சென்னை தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வு துறை அமைச்சர் மா.சுப்பிர மணியன், சோழங்கநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் எஸ். அரவிந்தரமேஷ், விருகம்பாக்கம் சட்டமன்ற உறுப்பினர் ஏ.எம்.வி.பிரபா கர்ராஜா மற்றும் 15 வது மண்டல குழு தலைவர் - பகுதி கழக செயலாளர் வி.இ.மதியழகன் ஆகியோர் கலந்துகொண்டு அன்னாரது படத்தை திறந்து வைத்து மரியாதை செலுத்துகின்றனர்.

இந்நிகழ்வில் மாவட்டத்திர்க்குட்பட்ட மாநில, மாநகர, மாவட்ட, பகுதி, வட்ட நிர்வாகிகள் , அணிகளின் அமைப்பாளர்கள் , துணை அமைப்பாளர்கள் கலந்து கொள்கின்றனர்.

